00678

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 03

**EPU3337 – ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறை**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

---

திகதி:- 31.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

---

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. "ஒன்றிணைந்த அணுகுமுறை" என்ற பதத்தினை வரையறுக்க.
2. ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறை ஏன் அவசியமானது?
3. ஒன்றிணைந்த அணுகுமுறையின் பண்புகள் எவை? (ஆகக் குறைந்தது **நான்கு (04)** பண்புகளையாவது குறிப்பிட வேண்டும்.)
4. முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை என்பவற்றில் ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய **நான்கு (04)** காரணிகளைக் குறிப்பிடுக.
5. "பிள்ளையின் பூரண விருத்தி" என்பதனால் கருதப்படுவது யாது?
6. ஒன்றிணைந்த கல்வியினால் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் எவை?
7. ஒன்றிணைந்த அணுகுமுறை இந்தியாவில் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது என விளக்குக.
8. ஆரம்ப வகுப்பறையில் ஒன்றிணைந்த அணுகுமுறைக்காக விடயங்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் எவை?

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. முன்பள்ளிப் பிள்ளைகளின் விருத்தியில் ஒன்றிணைந்த அணுகுமுறையின் பங்களிப்பினை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளை விருத்தியில் ஒன்றிணைந்த அணுகுமுறையின் பங்களிப்பானது எவ்வாறு முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை என்பவற்றுக்கிடையில் வேறுபடுகின்றது?

(10 புள்ளிகள்)

10. i. மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒன்றிணைந்த அணுகுமுறையில் கற்பிப்பதற்காக "நாங்கள் பயன்படுத்தும் பொருட்கள்" என்னும் கருப்பொருளில் திட்டமிடுக.

(05 புள்ளிகள்)

ii. உமது எண்ணக்கரு வரிப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு "நாங்கள் பயன்படுத்தும் பொருட்கள்" என்னும் கருப்பொருளில் விரிவான பாடத்திட்டமிடலை கீழுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி எழுதுக.

பாடத்திட்டமிடல்

- பாடம் :- சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
- தரம் :- 3
- கருப்பொருள் :- நாம் பயன்படுத்துபவை
- காலம் :-

கற்றல் பேறுகள் :

(i) ................................................................................

(ii) ................................................................................

(iii) ................................................................................

| நாளும் திகதியும் | கற்றல் பேறுகள் | கற்றல் கற்பித்தல் சாதனங்கள் | ஆசிரியர் பங்குபற்றல் | மாணவர் பங்குபற்றல் | காலம் | கணிப்பீடும் மதிப்பீடும் |
|---|---|---|---|---|---|---|
| | (i) | | | | | |
| | (ii) | | | | | |
| | (iii) | | | | | |

**(15 புள்ளிகள்)**

11. **i.** ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினை அமுல்படுத்தும்போது எதிர்கொள்ளும் **ஐந்து (05)** முக்கிய எழுவினாக்களையும், சவால்களையும் இனங்கண்டு விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையினை அமுல்படுத்தும்போது ஆசிரியர்களின் வகிபாகங்கள் **ஐந்தினைக் (05)** குறிப்பிட்டு, அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** வகுப்பறைகளில் ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறைகளை பயன்படுத்தும்போது பின்வரும் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவென விபரிக்குக.

- வகுப்பறை இடவசதியும் மாணவர் தொகையும்
- தனியாள் வேறுபாடுகள் **(02x5=10 புள்ளிகள்)**

12. **i.** பாடத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கும் ஒன்றிணைந்த அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

**(05 புள்ளிகள்)**

**ii.** "இலங்கையில் தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டமானது கற்போரின் முழு விருத்தியை ஊக்கப்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட பரப்புக்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டது."

இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடையினைப் பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(15 புள்ளிகள்)**

13. **i.** முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை என்பவற்றுக்குப் பொருத்தமாக ஒன்றிணைந்த கலைத்திட்டத்தின் எண்ணக்கரு வரைபடத்தினை வரைக.

**(08 புள்ளிகள்)**

**ii.** 1972 ஆண்டிலிருந்து ஒன்றிணைந்த அணுகுமுறையால் வகுப்பறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -



79